# கிராமிய சேவைத் திட்டம்

## கோயம்புத்தூர் மண்டலம்
## வடகோவை மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
## கருமலை செட்டிபாளையம் கிராமம்




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

| | |
|---|---|
| ☞ நோயற்ற வாழ்வு | ☞ குடும்ப அமைதி |
| ☞ கல்வியில் மேன்மை | ☞ கர்மயோக வாழ்க்கைநெறி |
| ☞ சுற்றுப்புற சுகாதாரம் | ☞ மனிதநேயம் |
| ☞ முதியோரைப் பாதுகாத்தல் | ☞ மதநல்லிணக்கம் |
| ☞ மகளிர் மேம்பாடு | ☞ சமுதாய விழிப்புணர்வு |

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# கோயம்புத்தூர் மண்டலம்
# வடகோவை மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# கருமலை செட்டிபாளையம் கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை........3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்........4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்........4

*4.* கருமலை செட்டிபாளையம் கிராமத்தின் தொடக்கவிழா ........5

5. மருத்துவ முகாம் ........7

6. மனநல ஆலோசனை முகாம்........7

7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்........7

8. மது ஒழிப்பு முகாம்........8

11. அனுபவ உரை ........9

12. எதிர்காலத் திட்டங்கள்: ........14

13. வாழ்த்து:........14

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | **கருமலை செட்டிபாளையம்** | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **06-07-2023** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **10-12-2023** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | 5 மாதங்கள் | | |
| 5. | மண்டலம் | **கோயம்புத்தூர்** | | |
| 6. | அறக்கட்டளை | **வடகோவை** | | |
| 7. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | *ஆண்:217* | *பெண்:236* | *மொ:453* |
| 8. | 14 வயதிற்கு கீழ் உடற்பயிற்சி பயின்றவர்கள் | *ஆண்:22* | *பெண்:33* | *மொ:55* |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | *ஆண்:55* | *பெண்:283* | *மொ:338* |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | *ஆண்:50* | *பெண்:291* | *மொ:341* |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | *ஆண்:49* | *பெண்:288* | *மொ:337* |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:18* | *பெண்:160* | *மொ:178* |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:18* | *பெண்:160* | *மொ:178* |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:18* | *பெண்:160* | *மொ:178* |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:13* | *பெண்:58* | *மொ:71* |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன் அவர்களால் **296-**வது கிராமமாக **கருமலை செட்டிபாளையம்** கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் 07-07-2023–ஆம் தேதியிலிருந்து *10-12-2023*-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. கருமலை செட்டிபாளையம் கிராமத்தின் தொடக்கவிழா

***Vadakovai MVKM Trust, Vadakovai MVKM Trust Trustees and Members* ஆகியோரின்** நிதி உதவியுடன் **கோயம்புத்தூர்** மண்டலம், **வடகோவை** மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, 07-07-2023-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி. SKM.மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் **கருமலை செட்டிபாளையம்** கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.













**உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**







## 5. மருத்துவ முகாம்

*02.12.2023 அன்று கருமலை செட்டிபாளையம் கிராமத்தில் **Govt PHC** மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் 69 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*





## 6. மனநல ஆலோசனை முகாம்

***18.10.2023** அன்று **Dr.A.Ramesh** அவர்களால்* **மனநல ஆலோசனை முகாம்** *நடத்தப்பட்டது. இம்முகாமில் மொத்தம் 110 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*





## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

**30.08.2023** *அன்று* **கருமலை செட்டிபாளையம்** *கிராம மக்களுக்கு 113 மரக்கன்றுகள் வழங்கக்கப்பட்டது. இதில் கிராம மக்கள் கலந்து கொண்டு மரங்களைப் பெற்றுச் சென்றனர்.*





## 8. மது ஒழிப்பு முகாம்

29.11.2023 *அன்று **Dr.N.Babu** அவர்களால் **மது ஒழிப்பு முகாம்** நடத்தப்பட்டது. இம்முகாமில் மொத்தம் 56 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*




## 9. மனைவிநல வேட்பு விழா

**30.08.2023** *அன்று கருமலை செட்டிபாளையம் கிராமத்தில் மனைவி நலவேட்பு தினம் நடத்தப்பட்டது. இதில் 125 தம்பதியினர் உட்பட 60 கிராம மக்கள் கலந்துகொண்டனர்.*




## 10. மகரிஷி பிறந்தநாள் தினம்

**30.08.2023** *அன்று கருமலை செட்டிபாளையம் கிராமத்தில் மகரிஷி பிறந்தநாள் தினம் நடத்தப்பட்டது. இதில் வடகோவை அறக்கட்டளை பொறுப்பாளர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்துகொண்டனர்.*



## 11.அனுபவ உரை

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | Around 97% of the participants mental health has calmed due to the SKY Meditation |
| 2 | Around 97% of the participants able to remember the things |
| 3 | Around 97 % of the participants are out of the depression compared to before joining the program |
| 4 | 95% of the participants are able to control their anger |
| 5 | 95% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 6 | 95% of the participants are satisfied their children's focus towards education |
| 7 | Around 87% (395) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation-161 participants cured of Joint pain, 132 participants cured of sugar problem, 102 participants cured of Eye problem with respect to sight, watering eyes, |
| 9 | **Around 97% of the participants are happy with the VSP Programme compared to only 45% before joining the program** |

## Feedback Trend



3

குருவே துணை



வாழ்க வையகம்                வாழ்க வளமுடன்

எனது ஊர் கருமலைசெட்டிபாளையம் கிராமத்தில்
அருகில் சிறாநாயக்கன் பாளையம். வழியில் செல்லும்போது
இருந்த மகரிஷி தியான கூடம் கண்டேன். தியானம், யோகா எப்படி
என்று கேட்டேன். அவர்கள் தினந்தோறும் பயிற்சி வகுப்புகள் 5 to 6 pm
6 to 7 pm, வகுப்புகள் நடக்கும். என்று சொன்னார்கள் தியானப்பயிற்சி
1 மாதம் முடிந்த நிலையில் நான் 5 மணிக்கு தியான கூடத்திற்கு
செல்ல பழகி கொண்டேன். எனக்கு Back pain இருந்தது. 3 மாதம்
பின் இப்போது Back pain நோய் குறைந்து விட்டது. 3 மாதம் பயிற்சி
பின் என்னை ஆழியாறு திருக்கோயில் அழைத்து சென்றார்கள்.
என்னுடைய அதிசயங்கள். அங்கு 5 மணிக்கு எழுந்து குளித்து விட்டு
தியான பயிற்சி செய்து அங்கு தியானத்தில் மெய் என்னுடைய
ஆழ்மனதில் நான் யார் என்பதை நன்றாக புரிந்து கொண்டேன்.
மற்றும் பேராசிரியர்கள் விளக்க உரை என் மனதில் ஆழமாக
பதிந்துவிட்டது. உணவு என்பது மனதுக்கு மிக முக்கியம். அங்கு
தினந்தோறும் சத்தான அறுசுவை உணவு தந்த இறைவனுக்கு நன்றிகள்.
பல பல. அங்கு நடந்த பயிற்சிகள், தியானம், உணவு என்
கண்முன் வந்து கொண்டே உள்ளது. எனது வாழ்நாளில் மீண்டும்
மேலும் பயிற்சிக்கு சென்று கொண்டிருப்பேன். எனக்கு
[illegible] அதிசயங்கள் [illegible] நான்

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

என் பெயர் சந்திரா எனக்கு வயது 54 ஆகிறது.
நான் கருமனை செட்டிபாளையத்தில் வசித்து வருகிறேன்.
54 வருடம் ஆனபிறகுதான் எனக்கு மனவளக்கலை
யோகா பயிற்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு
கிடைத்தது. இந்த யோகா பயிற்சியில் கலந்த பிறகு
நான் கற்றுக் கொண்ட விஷயங்கள் அனைத்தும்
நன்மையே. நான் மனவளக் கலையில் சேர்ந்ததால்
எனக்கு பல நன்மைகள் ஏற்பட்டுள்ளது. உடலும்
உள்ளமும் தூய்மையும் மேன்மையும் அடைந்துள்ளது.
காயகல்ப பயிற்சி பெற்ற பிறகு எனக்கு உடல் வளமும்
சுறுசுறுப்பும் அதிகமாகவே கிடைத்துள்ளது. தவம் ஏற்ற பிறகு
மனதில் அமைதியும் ஆரோக்கியமும் பெற்றுள்ளது. எனக்கு
கொஞ்ச தூரம் நடந்து போனாலே மூச்சு வாங்கும். இடுப்பு
வலியும், முதுகுவலியும் வந்துவிடும். மூச்சு பயிற்சியும்,
மகராசனப் பயிற்சியும் செய்த பிறகு இடுப்பு வலி, முதுகுவலி
வருவதே இல்லை. நான் அடிக்கடி கோபப்படுவேன்.
தவம் செய்த பிறகு எனக்கு கோபம் வெகுவாக குறைந்துள்ளது.
யோகா வந்த பிறகு யாரைப் பார்த்தாலும் வாழ்க வளமுடன்
என்று வாழ்த்துச் சொல்கிறேன். நானும் என் கணவரும்
நேருக்கு நேராக முகத்தை ஒருநிமிடம் கூட கண்ணோடுகண்
பார்த்துக் கொண்டதே இல்லை. எனக்குத் தலையில் அவர் பூ
வைத்ததும் இல்லை. ஆனால் மனைவிநல வேட்பு நாளால்
எனக்கு பூ வைத்து என் கண்களை ஒருநிமிடம் உற்றுப்பார்த்தது
எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியை எனக்கு அளித்
ததற்கு காரணமாக அமைந்த ஆசான் அருள்தந்தை யோகிராஜ்
தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும் அவர் மனைவிக்கும்
மிக்க நன்றி கலந்த வாழ்த்து கூறுகிறேன். என்னைப் போலவே
எல்லோரும் யோகா கற்றுக் கொண்டால் வாழ்வில் அமைதியும்
குடும்ப ஒற்றுமையும், உடல் ஆரோக்கியமும், எப்பொழுதும்
நம்முடனே இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு நிறைவு செய்கிறேன்
வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.

குருவே துணை

வாழ்க வையகம்

வாழ்க வள



From :

சி. பெருமாள்
கருமலை செட்டிபாளையம் கிராமம் (VSI
கோயம்புத்தூர் - 641007.
Ph : 9842201213.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். எனது மூத்த மகன் கடந்த 1½ ஆண்டுக்கு முன்பு நீட் பயிற்சி சாலை விபத்தில் இறந்துவிட்டான். அதனைத் தொடர்ந்து எனக்கு ஏற்பட்ட இருதய நோயால் இருமுறை ஆஞ்சியோ சிகிச்சை செய்து "Stent" பொருத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கும் பின்பு அதிகமாக வீட்டை விட்டு வெளியில் வருவதில்லை. அருகில் அமைந்த மையத்தின் ஆசிரியர்களின் அறிவுறுத்தலால் சேர்ந்து மேற்கொண்ட உடற்பயிற்சியினால் உடல் ரீதியாகவும், அதைத்தொடர்ந்து வகுப்புகளில் கலந்து மனதளவிலும் தெளிவு பெற்றேன்.

ஆழியாரில் நடைபெற்ற சிறப்பான வகுப்பில் கலந்து கொண்டு மேற்கொண்ட பயிற்சி மற்றும் தவம் - அகத்தாய்வு மன மகிழ்ச்சியில் ஆழ்ந்தும் கொண்டேன். எனது பிறப்பின் ரகசியம், நான் எங்கிருந்தோ கடவுளாக வாழும் உண்மை கண்டேன். சுத்த வெளியின் அணுத்துகள்களின் கூட்டாய் இருக்கும் அதிசயம் கண்டேன். அறத்தொண்டில் ஈடுபட்டவர்களின் அன்பு, கனிவு மற்றும் உணவு மிகவும் சிறப்பாய் இருந்தது. ஓங்கி உயர்ந்த பசுஞ்சோலைகள் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய மலைச்சாரலின் ஆனந்தம் கண்டேன்.

மிகவும் சிறப்பான பயனுள்ள இப்பயிற்சியின் பயன் உலக மக்கள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும். குறிப்பாக கிராமப்புற ஏழைகளுக்கும், பாமர மக்களுக்கும் சென்று சேர்ந்து அவர்கள் மகிழ்வுடன் பெற்றவர்களாக வாழ



வாழ்க வையகம்! குருவே துணை. வாழ்க வளமுடன்!

வாழ்க வளமுடன். எனது பெயர் T. ஆறுமுகநாதன் கோயம்புத்தூரிலுள்ள Sugarcane Breeding Institute-ல (கரும்பு இனப்பெருக்கு நிறுவனம்) Scientist ஆக பணியாற்றி வருகிறேன். நான் தற்போது கருமலை செட்டிபாளையம் கிராமத்தில் நடைபெற்ற மனவளக்கலை பயிற்சி வகுப்பில் பங்கேற்ற அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறேன். நான் கடந்த பல வருடங்களாக காலையில் நடைப்பயிற்சி செய்வதை வழக்கமாக கொண்டிருந்தேன். அப்போது அங்கே என்னைக் கண்ட ஸ்ரீ வெள்ளியங்கிரி ஐயா அவர்கள் மனவளக்கலை பயிற்சி வகுப்புகள் கருமலைசெட்டிபாளையம் கிராமத்தில் நடைபெறுவதை தெரிவித்துக் கொண்டு அதில் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொண்டார். நானும் அரைகுறை மனதுடன் அந்த பயிற்சி வகுப்பில் பங்கேற்க ஆரம்பித்தேன். அங்கே உடற்பயிற்சி, தியானம், காயகல்பம் முதலியவை முறையாக கற்றுக்கொண்டேன். இவற்றை செய்தபின் உடலுக்கு நல்ல எழுச்சி வருவதையும் மனம் லேசாகவும் புத்துணர்ச்சி பெற்றது போலவும் உணர்ந்தேன். இவற்றை செய்யும்போது நாள் முழுவதும் புத்துணர்வுடன் இருப்பது போல உணர்கிறேன். மேலும் மௌனாசி ஆழியார் நகரில் அமைந்துள்ள அறிவுத்திருக்கோயிலில் பிரம்மஞான பயிற்சியிலும் கலந்து கொண்டேன். அந்த 3 நாள் பயிற்சியின் போது மனம் மிகவும் அமைதியடைந்ததை உணர்ந்தேன். மகரிஷி அவர்களின் மணி மண்டபம் மற்றும் ஓம்கார மண்டபங்களில் நடைபெற்ற நிலங்களில் பங்கேற்ற அனுபவத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. அற்புதமான காலம் அது. அங்கே நடைபெற்ற பயிற்சி வகுப்புகளும் மிகவும் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தன. இரண்டெழுத்துப் பண்பாடு வாசகங்களை திரும்ப திரும்ப சொல்லும் போது மனமானது யாருக்கும் துன்பம் தரக்கூடாது என்று அடி ஆழத்தில் பதிவு செய்து கொண்டது போல உணர்கிறேன். இந்த மனவளக்கலை பயிற்சியால் மிகுந்த பயனடைந்தது போல உணர்கிறேன். இந்த பயிற்சியில் கடந்த சில மாதங்களாக ஆசிரியர் திருமதி. கலிதா அவர்கள் எல்லா வகுப்புகளையும் மிகச் சிறப்பாக நடத்தினார். அவருக்கும் இந்தப் பயிற்சி வகுப்புகள் எங்கள் பகுதியில் நடைபெற காரணமாயிருந்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. வாழ்கவளமுடன்... T. ஆறுமுகநாதன்

## 12. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க **கருமலை செட்டிபாளையம்** கிராமம், **வடகோவை** மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 13. வாழ்த்து:

**கருமலை செட்டிபாளையம்** கிராமத்தை அமைதிகிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாறுவதற்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய ***Vadakovai MVKM Trust, Vadakovai MVKM Trust Trustees and Members -க்கும்*** இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த **கோயம்பத்தூர்** மண்டல பொறுப்பாளர்களுக்கும், **வடகோவை** மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் ***Asst.Prof.R.Kavitha & Asst.Prof.K.Balasubramaniam*** அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய **நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு** உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

***உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை***
***உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.***
***உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே***
***உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.***

***-வேதாத்திரி மகரிஷி***

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

குருவின் சேவையில்
*WCSC-VSP* இயக்குனரகம்
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*